**தலைப்பு 297 - கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 297 - கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 08 ஆந் திகதி கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடியவகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ரூபா 49.82 மில்லியன் தொகை மொத்த தேறிய மீண்டெழும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 47.94 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தின் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு, தேறிய மீண்டெழும் ஏற்பாடுகளில் ரூபா 1.88 மில்லியன் தொகையாக அல்லது 3.77 சதவீதமாகக் காணப்பட்டது.

**2.2 வருமானக் கணக்குகள்**

---

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

---

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான மூன்று வருமான குறியீடுகள் தொடர்பில் ரூபா 1,220.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 1,359.19 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 111.40 சதவீதமான வருமானத் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. விடயம் பின்வருமாறு.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமொன்றாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியானவருமானம் | மிகை | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 20.03.02.10 | 100.00 | 166.48 | 66.48 | 66 |
| 20.03.02.12 | 20.00 | 29.95 | 9.95 | 50 |
| 10.03.02.08 | 1,100.00 | 1,162.76 | 62.76 | 06 |
| **மொத்தம்** | **1,220.00** | **1,359.19** | **139.19** | **11.41** |

### 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்குரிய 29701 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமானங்கள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவுமீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5.50 | 5.38 | 3.00 | 3.57 | 20.00 | 12.15 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

## 3. பொருன்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு மற்றும் அவதானிப்புக்கள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பராமரிக்கப்படாமை

அரச பெறுகைகள் மற்றும் வழிகாட்டல்களின் 4.2.3 ஆம் வழிகாட்டல்களின் உறுப்புரையின் பிரகாரம் பொருட்கள் மற்றும் வேலை ஒப்பந்தங்கள் மீதான பெறுகைக் கால பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், இந்த திணைக்களம் பொருட்கள் மீதான அவ்வாறான கால பட்டியலினை முறையாக பராமரித்திருக்கவில்லை.

**3.2 வருமானக் கணக்குகள்**

திணைக்களத்தின் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 03 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களை சேகரித்தல், கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளை சேமிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீடுகளுக்கு உரியதாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) 20.03.02.10 ஆம் இலக்க வருமானக் குறியீடு – கம்பனிகள் பதிவாளரின் கட்டணங்கள்**

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் பிரகாரம், வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 100 மில்லியன் தொகையான வருமான சேகரிப்பு மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 166.48 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்நதுடன் அந்தத்தொகை மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 166 சதவீதமாக காணப்பட்டது. மொத்த வருமானத்தில் ரூபா 62.12 மில்லியன் தொகையொன்று வருடாந்த பதிவுகளுக்கான வருமானதிற்காக பெறப்பட்ட வருமான நிலுவைகளினை பிரதிநிதித்துவப்படுத்தி சேகரிக்கப்பட்டதுடன் அது மொத்த வருமானத்தின் 37 சதவீதமாகக் காணப்பட்டது.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம், ரூபா 286.22 மில்லியன் தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் வருடத்துடன் தொடர்புடைய வருமானத்தின் நிலுவைகள் ரூபா 75.41 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. அந்த வருமான நிலுவைகளின் தொடர்புடைய காலப்பகுதிகள் 01 வருடம் தொடக்கம் 06 வருடங்கள் விச்சில் காணப்பட்டதுடன் அந்த நிலுவைகளின் அறவிடுகை மீதான பின் தொடர் செயற்பாடு பலவினமானதொரு மட்டத்தில் காணப்பட்டிருந்தது.

(iii) அரசினால் பெறவேண்டிய நிலுவையாகவுள்ள வருமான நிலுவைகளின் துரிதமான சேகரிப்புக்கு நிதிப்பிரமாணம் 128(2)(உ) இன் உறுப்புரைகளின் பிரகாரம் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 04(ஆ) பந்தியின் உறுப்புரைகளின் பிரகாரம், வருமதியாகவுள்ள வருமான நிலுவைகளின் தொகை மற்றும் வருமான நிலுவைகள், மற்றும் ஏதாவது தெளிவாக விபரிக்கக்கூடியவறான அறிக்கைகள் முறையாகப் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மேற்குறித்த சுற்றறிக்கையின் 4(ஆ) பந்தியின் பிரகாரம், நிலுவைகளிலுள்ள வருமானத்தை அறவிடுவதற்கு மற்றும் நிலுவைகளிலுள்ள திரண்ட வருமானத்தை மேலும் தடுப்பதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வருடாந்த வருமானங்களுக்காக பெறவேண்டிய வருமதியாகவுள்ள வருமான நிலுவைகள் மாத்திரம் நிலுவையாகவுள்ள வருமான அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால், பதிவு செய்யப்பட்ட சமுகங்களிலிருந்து வருமதியாகவுள்ள வருடாந்த வருமான நிலுவைகள் மற்றும் கம்பனிகளிடமிருந்து பெறப்படவேண்டிய வருமான நிலுவைகள், அவற்றின் நிதி அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் நிலுவையகாவுள்ள வருமான அறிக்கைகளில் கணிப்படப்பட்டு மற்றும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 20.03.02.10 ஆம் இலக்க வருமானக் குறியீடு – பொது ஒப்பந்தத்தின் கீழ் கட்டணங்களின் அறவிடுகைக்கான சட்டம்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் பிரகாரம், வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 20.00 மில்லியன் தொகையான வருமான சேகரிப்பு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 29.95 தொகையொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 50 சதவீதமான அதிகரிப்பொன்றாக காணப்பட்டது.

(ii) 1987 இன் 03 ஆந் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் (2) (1) ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியனை மிகைக்கின்ற கிரயத்தினையுடைய பொது ஒப்பந்தங்கள் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்துடன் பதிவு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், திணைக்களத்தில் தொடர்புடைய அனைத்து ஒப்பந்தங்களினதும் பிரிவுகளுக்கு குறித்துறைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்காமையினால் அரச வருமானத்தினால் பெறப்பட்டிருக்கக்கூடிய பாரியளவிலான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(iii) 1987 இன் 03 ஆந் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் லை(3) ஆம் பிரிவின் கீழ் சான்றுப்பத்திரமொன்றை விநியோகிப்பதுடன், பிரிவு 14 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறான சான்றுப்பத்திர வழங்குகையிலிருந்து ஒரு வாடகைப்பகுதியொன்று செல்லுபடியானதாக காணப்படுகின்றதுடன் குறித்துறைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தும் போது ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு அவ்வப்போது புதுப்பித்துக்கொள்ள முடியுமாகக் காணப்படுகின்றது. இருப்பினும், கீழ் கானும் இரண்டிலொன்றை கண்காணிப்பதற்கு திணைக்களம் இதுவரை முறைமையொன்றினை நிறுவியிருக்கவில்லை.

- ஒரு வருட காலப்பகுதியொன்றிற்கான காலாவதியின் பின்னர் புதுப்பித்தலுக்கான பதிவுக்கு விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.
- பொது ஒப்பந்தமொன்றின் மீள் - பதிவுகளுக்காக விண்ணப்பங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டமை.

ஆகையினால், வருமானத்தினால் பெறப்பட்டிருக்கக் கூடிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

**(இ) 20.03.02.10 ஆம் இலக்க வருமானக் குறியீடு – கம்பனிப் பதிவு வரி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் பிரகாரம், வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 1,100.00 மில்லியன் தொகையான வருமான சேகரிப்பு மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,162.72 மில்லியன் தொகையொன்று சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகை மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 106 சதவீதமாகக் காணப்பட்டது.

(ii) வரி அறவிடுகை மீதான கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரி செலுத்துவதற்கு பொறுப்பான கம்பனியின் எண்ணிக்கை 77,392 ஆகக் காணப்பட்டதுடன் வரிகள் செலுத்திய கம்பனிகளின் எண்ணிக்கை 16,826 அல்லது 22 சதவீதமாக காணப்பட்டது.

(iii) 2016 ஆம் ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டு முன்மொழிவொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம், நிதியமைச்சின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கம்பனிகளிடமிருந்து தொடர்புடைய வரி விதிக்கப்பட்டிருந்தது. இந்த வரியின் அமுல்படுத்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலொன்று விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அல்லது நிதிச் சட்டத்திற்கு தொடர்புடைய சட்டரீதியான திருத்தங்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முறையான சட்ட அதிகாரமின்றி இந்த வரி விதிக்கப்பட்டிருந்ததுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளில், சில கம்பனிகள் மாத்திரம் இந்த வரியினை செலுத்தியிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று

29701 ஆம் விடய இலக்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிப்புககப்பட்டன.

(அ) 2004 ஒக்தோபர் 11 இன் 118 ஆம் இலக்க பாதிட்டு சுற்றறிக்கையில் 1.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையினால், இடமாற்றங்களில் திணைக்களத்தினை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து வருமதியாகவுள்ள ரூபா 120,741 கடன் மீதியொன்றினை அறவிடுவதற்கு சாத்தியக்கூறு அற்றதாகக் காணப்பட்டது.

(ஆ) 2005 ஆகஸ்ட் 01 இலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து வருமதியாகவுள்ள ரூபா 17,000 கூட்டுத்தொகையான கடன் மீதியொன்றினை அறவிடுவதற்கு சாத்தியக்கூறு அற்றதாகக் காணப்படுகின்றது.

(இ) 2004 ஒக்தோபர் 11 இன் 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.17 ஆம் பகுதியின் பிரகாரம், உத்தியோகத்தரொருவர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது 03 மாதங்களுக்குள்ளும் வரும்போது 02 மாதங்கள் கடப்பதற்கு முன்னரும் கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும் இடமாற்றம் பெற்றுவந்த 05 உத்தியோகத்தர்கள் தொடர்பில் ரூபா 444,778 மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்கள் தொடர்பில் 08 மாதங்கள் வருமான தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 4.2.1(அ),(இ),(ஈ) மற்றும் 4.2.2(அ) வழிகாட்டல்களின் பிரகாரம், ஆகக் குறைந்தது 03 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகைகள் செயற்பாடுகளினை உள்ளடக்குவதன் மூலம் பிரதானமான பெறுகைகள் நிருவகம் தயாரிக்க வேண்டியதுடன் விபரமான ஆண்டின் பெறுகைகள் செயற்பாடுகளினை உறுதிப்படுத்துவதுடன் 06 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு தொடர்ச்சியாக

அது நாளதுவரையாக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமானம் 133(2) இனால் வேண்டப்பட்டவாறு போதுமான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

கணக்காய்வுத் தெரிவுப் பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் | |
| நிதிப் பிரமாணம் 128(2)(உ) | அரசிற்கு வருமதியாகவுள்ள வருமானத்தின் வருமதியாகவுள்ள மீதிகளின் விரைவான சேகரிப்புக்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வருமதியாகவுள்ள வருடாந்த வருமான திபல்களினை அறவிடுவதற்கு திணைக்களம் முறையானதொரு நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை | |
| (i) 04(அ) பந்தி | பெறவேண்டிய வருமானத்தின் தொகை, சேர்க்கப்பட்ட வருமானத்தின் தொகை மற்றும் வருமானத்தின் நிலுவைகள், ஏதாவது போன்றவற்றினை விபரமாக விபரிப்பதற்காக அறிக்கைகள் முறையாகப் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 04(ஆ) பந்தி | நிலுவைகளாகவுள்ள வருமானத்தை அறவிடுவதற்கு மற்றும் நிலுவைகளில் வருமானத் திரட்டினை மேலும் தடுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பதிவுசெய்யப்பட்ட சமுகங்களிருந்தான வருமானம்**

2005 இன் 11 ஆம் இலக்க சமுகங்கள் கட்டளைச்சட்டம் (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தின் உறுப்புரைகளில், வருடாந்த வருமானங்களினை பதிவுசெய்யப்பட்ட சமுகங்கள் கேவையிட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்கு வருடாந்த வருமானக் கோவைகளுக்கு பொறுப்பாகவுள்ள 12,281 சமுகங்களிடமிருந்து சேர்க்கப்படக்கூடியதாகவுள்ள வருமானம் ரூபா 12,281,000 தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டின்போது வருடாந்த வருமானங்களினை கோவையிட்ட சமுகங்களின் எண்ணிக்கை 70 ஆக காணப்பட்டதுடன் அந்த சமுகங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 70,000 தொகை அல்லது அவற்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருமதிகளில் 0.57 சதவீத வருமானமாகக் காணப்பட்டது. அதற்கமைய, நிலுவையாகவுள்ள வருமானம் ரூபா 121,211,000 தொகையாகக் காணப்பபட்டது. நிதிப்பிரமாணம் 128(2)(உ) இன் உறுப்புரைக்கமைய பதிவுசெய்யப்பட்ட சமுகங்களிலிருந்து நிலுவையாகவுள்ள வருடாந்த வருமானங்களிலுள்ள வருமானத்தை சேகரிப்பதற்கு மற்றும் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வருமான நிலுவையாகவுள்ள வருமானமாகக் குறிப்பிடுவதற்கு செயற்பாட்டிலுள்ள சமுகங்களினை இனம்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்பாட்டிலுள்ள சமுகங்களின் உள்ளபடியான எண்ணிக்கை, செயற்பாற்ற சமுகங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட செயற்பாட்டிலுள்ள சமுகங்கள் மற்றும் செயற்றபாடற்ற சமுகங்களின் எண்ணிக்கை மீதான துல்லியமான புள்ளிவிபரவியல் தகவல்களினை பெறுவதற்கு முறையானதொரு கணனி தாவு முறைமையொன்று காணப்படாமையின் காரணமாக, அவற்றின் கீழ் சேகரிக்கப்படக்கூடிய வருமானம் மற்றும் வருமான நிலுவைகளினை சரியாக இனம்காண்பதற்கு சாதியக்கூறற்றதாக காணப்படுகின்றது.

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான வருமான நிலுவைகள் ரூபா 850 மில்லியனை மிகைத்திருந்ததுடன் நிலுவையிலுள்ள வருமான அறவிடுகைக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையிலுள்ள தரம் 01, தரம் 03 இன் உத்தியோகத்தரொருவர் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் தொடர்புடைய தகவல் முறைமையின் பராமரிப்பு நாளது வரையாக்கப்பட்ட வகையொன்றில் காணப்படுகின்றது.

(ஆ) திணைக்களத்தின் சுவடிகள்காப்பக அறை 5000 சதுர அடியினைக் கொண்டிருந்ததுடன் வைக்கப்பட்டிருந்த கோவைகளின் எண்ணிக்கை அண்ணளவாக 174,787 ஆகக் காணப்பட்டதுடன் தினமும் பரிமாற்றப்படுகின்ற விச்சில் காணப்பட்டது. அதைத்தவிர, நாள்தோறும் திரளும் கோவைகளின் எண்ணிக்கை மொத்தமாக 40 தொடக்கம் 50 வரையான கோவைகளாகக் காணப்படுகின்றது. அதற்கமைய பதிவு அறை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சுவடிகள்காப்பக அறையில் போதுமனளவு இட வசதிகள் காணப்பட்டாததுடன் கோவைகளிலுள்ள தூசிகளினைத் துடைப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் முறையானதொரு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, உத்தியோக உறுப்பினர்களின் பதவியணியினரின் சுகாதாரத்திற்கு பலமான அச்சுறுத்தலொன்று காணப்படுகின்றது.

(ii) சுவடிகள்காப்பக அறையில் வைக்கப்பட்டுள்ள மற்றும் திணைக்களத்தில் மீள்பதிவு செய்யப்பட்ட கோவைகளுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கு முறையானதொரு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தனியார் பாதுகாப்பு சேவையின் 03 உத்தியோகத்தர்கள் அங்கு கடமைகளுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(iii) மேலும், தனியார் பாதுகாப்பு சேவையின் பாதுகாப்பு உத்தியோகத்தரொருவரின் மேற்பார்வையின் கீழ் பாதுகாப்பு அளவீடென்றாக பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மை தொடர்பான பிரச்சினைகள் எழலாம் எனவும் நடக்கக்கூடியதுமாகவும் அவதானிக்கப்பட்டது.

(இ) கம்பனிகள் சட்டத்தின் உறுப்புரைகளின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் பதிவு மற்றும் அதன் கீழ் அமைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் விவகாரங்களினைக் கையாளுவதுடன் செயற்பாடுகள் அதற்கமைய மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதுடன் அவ்வாறு செய்யததவறும் பட்சத்தில், கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு சட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்டரீதியான செயற்பாடுகளின் ஒதுக்கீட்டிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காரண நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இருப்பினும், கம்பனி செயற்பாடுகளின் விதிகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் போதுமையற்றதாகக் காணப்பட்டது.

(ஈ) தொடர்புடைய கல்விசார் மற்றும் தொழில்சார் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் தனிநபர் கோவைகளில் உள்ளடக்கப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் தொடர்புடைய சான்றுப்பத்திரங்களின் துல்லியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நிறுவுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 09 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 107 | 75 | 32 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 25 | 27 | - | - |
| | **மொத்தம்** | **149** | **113** | **36** | **02** |

(ஆ) 2013 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியின் பதிவாளர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாக காணப்பட்டதுடன் ஒரு உத்தியோகத்தர் முழு நேர பதில் அடிப்படையில்

நியமிக்கப்பட்டிருந்தார். கம்பனிப்பதிவாளர் தரம் 01 இன் இரண்டு பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த இரண்டு பதவிகளின் கடமைகளினை உள்ளடக்கும் அடிப்படையில் 02 உதவி கம்பனிப் பதிவாளர் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். மேலும், உதவி கம்பனிப் பதிவாளர் பதிவொன்று தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது.

(இ) கம்பனிகள் பரிசோதனை உத்தியோகத்தர்களின் 10 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 10 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்ட 54 முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளில் 18 உம் வெற்றிடமாக காணப்பட்டது.

(ஈ) அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட புதிய கலவை உதவி.்.பிரதி கம்பனிகள் பதிவாளர் (நிர்வாகம் எஸ்.எல்.ஏ.எஸ்) தரம் I, தரம் III மற்றும் உதவிப் பணிப்பாளரின் பதவியொன்று (இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை) தரம் I, தரம் III, இனை உள்ளடக்கியிருந்த போதிலும், இதுவரை தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. ஆட்சேர்ப்புத் திட்டம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2017 ஆகஸ்ட் 01 வரையிலும் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.